ஓலை 45 | ஓசை 157 | கன்னி(செப்டம்பர் ) 2023

# அகர முதல இலக்கியப் பேரவை

அகரமும் தமிழே! முதலும் தமிழே!!



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

அகர முதல

உரக்க சொல்வோம்

# அறிவோம் வள்ளுவம்!



**அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை**
**ஒழுக்க மிலான்கண் உயர்வு.**

பொறாமை உடையவனிடத்தில் ஆக்கம் இல்லாதவாறு போல, ஒழுக்கம் இல்லாதவனுடைய வாழ்க்கையில் உயர்வு இல்லையாகும்.

**Translation:**

The envious soul in life no rich
increase of blessing gains,
So man of 'due decorum' void
no dignity obtains.

**Explanation:**

Just as the envious man will be without wealth, so will the man of destitute of propriety of conduct be without greatness.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல
## இலக்கியப் பேரவை

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்

### அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

# அன்பின் உருவடி நீ

பா வகை - வழிநடைச் சிந்து

காதலாகி கசிந்துருகி கனிவியும் - இங்கே
கவிதையொன்று வடிக்குதேயடி
கற்பனையில் கண்விழித்தடி
ஆதவனாய் என்வானில் இருக்கிறாயடி - இருளை
அடித்தேதான் வெளுக்கிறாயடி
அகத்திற்குள் குடிபுகுந்தடி

நினைவெல்லாம் பசுமைகள் படருதடி - நீயும்
நிலைகொண்டாய் என்னுள்ளடி
நித்திலமாய் ஒளிர்கிறாயடி
பனைவெல்லம் போலவே இனிக்குதடி - இன்பம்
பதியம் போட்டதாரடி
பதிய வைத்ததாரடி

இன்றும் கூட ஏங்குதடி - கண்கள்
என்றுனைக் காணுமடி
என்னாசை நிறைவேற்றடி
அன்றைய நினைவுகள் மலருதடி - மனம்
அதில்கரையவே விரும்புதடி
அன்பின் உருவடிநீ



கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# காற்றைக் கிழித்தே சென்றிடு



வாழ்வது ஒருமுறை
வாழ்வு சிறந்திட

உயர்குறிக்கோள் கொண்டே
அயர்வை அகற்றியே

நன்முறையோடு பயிற்சி
அக்கறையோடு செய்தே

சோதனை வந்திட
சோம்பித் திரியாது

உறக்கந் தவிர்த்து
தன்னம்பிக்கையோடு துணிவாய்த்

தலையை உயர்த்தி
தடைதாண்டி சென்றிடு.

மோதிச் செல்லும்
காற்றைக் கிழித்தே

முனைப்போடு முந்தி
விரைப்பாய்ச் சென்றிடு.

இகழ்வோரை ஒதுக்கி
நிகழ்வைக் கவனி.

தொலைதூரத்தில் புள்ளி.
தொட்டுவிடும் நோக்கோடு

சிறகசைத்து உறுதியாய்
திறமையோடு பறந்திடும்

வல்லூறாக உன்னை
வலிந்தே நினைத்திடு.

வானில் நிதானமாய்
வட்டமிட்டே பறந்திடு.

மமதையை அழித்தே
மனதை அமைதியாக்கு.

இலக்கை அடைந்ததும்
வில்லின் வளைவில்

விருட்டென கிளம்பும்
கணையாய் மாறி

இலக்கைத் தொட்டே
இசையினைப் பெற்றிடு.

வாகை சூடி
வாகாய் நடந்திடு.

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# காலம் முழுவதும்



கவிதை மனமின்றி
கவிதைக்குள்
எளிதாய் நுழையமுடியாது.

விரமிருந்து
பக்தியுடன் கடவுளை
தரிசிப்பது போலத்தான்
கவிதையை
பற்றுடன் ரசிப்பதும்.

கவிதை
காற்றில் பறக்கும்
இறகென இருத்தல்
மிகவும் அவசியம்.
கவிதையும்
கவிதை வாசிப்பவரின் மனமும்
வாசம் தாங்கிவரும்
தென்றலைப் போலிருத்தல்
சிறப்பு.

சில கவிதைகள்
மேற்கூறியவைகளிலிருந்து
புயலென மாறுபட்டு
படைக்கப் படுவதுமுண்டு.
இம் மாதிரியான
கவிதைகள்
நிச்சயம் புரட்சியை
உண்டுபண்ணும் என
சொல்லமுடியாது.

எது எப்படியோ
கவிதை கவிதையாய்
இருக்கும் பட்சத்தில்தான்
காலம் முழுவதும்
பேசப் படுகின்றன
பல கவிதைகள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# சந்திரனில் கால் பதித்த சந்திரயான் 3

தேசம் முழுதும் பிராத்தனைகளுடன் காத்திருந்தது
மனதில் நிறைந்த நம்பிக்கையுடன்
வெற்றி என்பது நிலையல்ல,தோல்வி என்பது முடிவல்ல
கடந்த காலத்தோல்வியால் இன்னும் கவனம் செலுத்தியிருந்தனர்

இந்திய இளவல்கள் இஸ்ரோவின் விஞ்ஞானிகள்
தலைகீழாக நேரம் நகர நொடிமுள்ளின்
ஒவ்வொரு நகர்வும் இதயத்துடிப்பை விரைவாக்க
இன்னும் கூட உறுதியாக நம்பினர்
நாட்டு மக்கள் நாம் சாதித்து விடுவோம்



எண்ணங்கள் செயலானது
கனவுகள் நனவானது
நிமிர்ந்தது தேசம்
வெற்றிப் புன்னகையுடன் நிலவை நோக்க

வல்லரசு நாடுகளும்
வல்லமை உணர்ந்தன
அந்நிய தேசங்களும் அதிசயமாய் நோக்கின

வானமும் வசப்பட்டது
குழந்தை பாடலில் கைகாட்டி அழைத்த சநதிரன்
இன்று கை குழுக்கி மகிழ்கிறது சந்திரயானுடன்.

கவிஞர் கீர்த்தனா பு,பி.கே.ஆர் மகளிர் கலைக்கல்லூரி தன்னாட்சி

# வல்லமை தாராயோ



வல்லமை தாராயோ
உச்சம் தொடும்
துயரங்கள் கொடுத்தாலும்
அச்சமின்றி எதிர்க்கும்
வல்லமை தாராயோ.

தோல்விகள் அல்ல இது
வேள்விகள் என்று
தோற்றாலும் துடிப்புடன் இயங்கும்
வல்லமை தாராயோ.

முகங்களை மாற்றிக்
கொண்டே இருப்பவர்களை
அகத்திலே இருந்து எறியும்
வல்லமை தாராயோ.

நிராகரிக்கப்படும்
இடத்திலெல்லாம்
நிதானமாகப் பயணித்து
காலம் நடத்தும் கல்வியை
கலங்காமல் கற்றுக் கொள்ளும்
வல்லமை தாராயோ.

நிறைமதி போல வளர்ந்தாலும்
பிறை போலத் தேய்ந்தாலும்
பின்னடைவு இல்லாமல்
பிறவிக் கடலை நீந்திக் கடக்கும்
வல்லமை தாராயோ.

கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன்,கோவை மாவட்டம்

# கல்லுக்குள் ஈரம்

கல்லுக்குள் ஈரம்
கடவுளின் வரம்
ஏழு சுரம்
எத்தனை சுகம்

இதய வானில்
இலக்கு நோக்கி
இயன்றவரை செய்தால்
இறையுணர்வு நிறையும்



கடலின் அளவு
கைப்பிடியில் அடங்குமோ?
கல்லை சிலையாக்க
கலைகள் பிறக்குமோ?

விதைகள் முளைத்தால்
வீரியத்துடன் எழுமே!
வித்தைகள் காட்டும்
தத்தைகள் உணர்த்துமே!

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# கண்ணோட்டம்

**அதிகாரம் : 58**

கண்ணுக்கு அழகு
எதிர்நோக்கும் கண்ணோட்டம்.
மண்ணது இவ்வழகால்
அழியா நிலைபெறும்.

கண்ணோட்டம் உலகிற்கு
நடைமுறைப் பயணம்.
இல்லாதிருப்போர் உயிரோடு
நடைபோடல் சுமையாம்.

பாட்டோடு பொருந்தாயிசை
என்ன பயனுமில.
கண்ணோட்டமில்லா கண்கள்
இருந்தும் பயனில.

கண்ணோட்டமில்லா கண்கள்
வதனத்தில் உள்ளதானால்.
அத்தோற்றம் தவிர
வேறென்ன பயன்தரும்.

கண்ணுக்கணி கண்ணோட்டம்
கண்ணதை கொள்ளாவிடின்.
அஃதை புண்ணெனக்கொள்வர்
அறிவுடை சான்றோர்.

இரக்கமெனும் கண்ணோட்டம்
இல்லாத கொடியோர்.
மண்ணோடு பொருந்திய
மரத்துக்கு ஒப்பாவர்.




கண்ணோட்டமில்லா மக்கள்
கண்ணிருந்தும் குருடரே.
கண்ணுடையோரிடம் கண்ணோட்டம்
காணாதிருத்தல் பொருத்தமில.

தத்தம் கடமையாம்
தொழில் கெடாமல்.
கண்ணோட்டங் கொளவல்லார்க்கு
இம்மண்ணெல்லாம் உரிமையாம்.

தண்டிக்கப்பட வேண்டியோரிடமும்
தன்மையான குணமெனும்.
கண்ணோட்டங் காட்டி
குற்றம்பொறுத்தல் நலம்.

கண்ணோட்டமெனும் நாகரிகம்
விரும்பும் நல்லோர்.
நண்பர்கள் தமக்கு
நஞ்சளித்தாலும் உண்டமைவர்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# பதுங்கு குழிகளுமே


பதுங்கு குழிகளுமே,
படைவீரருக்கு நாட்டைக்காக்கவே,
பாவிமக்களுக்கு தன்னைக்காக்கவே,
பாரம் சுமப்பவருக்கும் நிழலுக்காகவே,
பிள்ளைகளுக்கு பிடித்து விளையாடவே,
பிச்சை எடுப்பவருக்கும் ஓய்வெடுக்கவே,

பல வணிகர்களுக்கும் பதுக்கிவைக்கவே,
பகடி தலைவருக்கும் பணம் பதுக்கவே,
பாவிகளுக்கும் பாவம் மறைக்கவே,
பாட்டாளிகளுக்கு படுத்துறங்கவே,
பதுமைகளும் வன்கொடுமையில் தப்பிக்கவே,
பற்பல பூச்சிகளுக்கும் பறந்துகடிக்கவே ,
படைத்தவனையே மறைத்து வைத்து,
பல நாடு கடத்தி படுத்திடுவர் குழியினிலே!



கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# சிட்டுக்குருவியே!



என் ஒற்றை விரலில் அமர்ந்தவளே
அழகு வண்ண சிட்டுக் குருவியே
மனம் விட்டு நீ பேச
துணை தேடி இங்கே வந்தாயோ

வந்த இடத்தில் என்னை அறிந்தாயோ
என் விரல்களைப் பற்றிப் பிடித்தாயோ
உன் பாசையில் நீ சொல்வதெல்லாம்
எனக்கும் புரியும் அதை நீயறிவாயோ

என்னை உனக்கு பிடித்து இருந்தால்
தொடர்ந்து என்னுடன் நீ பயணிக்கலாம்
எனக்கும் உன்னை மிகவும் பிடிக்கும்
உன்னை விரட்டும் எண்ணம் எனக்கில்லை

தொலை தூரம் நாம் சேர்ந்து
ஒன்றாய் இணைந்து பயணம் செய்வோம்
மனம் விரும்பும் இயற்கை உடன்
ஆடி பாடி சுற்றித் திரிவோம்

தடைகள் நம் முன் வந்தால்
நாம் சேர்ந்தே அவற்றை வென்றிடுவோம்
எனக்கும் உனக்கும் பிடித்த யாவையும்
நாமே தேடி சென்று பெற்றிடுவோம்

உன் உறவுகளும் உன்னிடம் இல்லை
என் உறவுகளும் என்னிடம் இல்லை
உனக்கு நானும் எனக்கு நீயும்
உற்ற தோழிகளாய் உறவாடி மகிழ்வோம்

இந்த உலகம் தாண்டி நாமும்
வேறு உலகம் தேடி தினமும்
சுதந்திர காற்றை சுவாசித்த வண்ணம்
எமது வாழ்வில் தொடர்ந்து செல்வோம்

கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் (இலங்கை)

# சமநிலை – வாழ்க்கை

நேற்று அதீத கவலையின் அதீத உச்சம்
இன்று கவலைகள் அனைத்தும் ஒரு ஓரமாய் காற்று வாங்குகின்றது

நாளை சிறு புன்னகையோடு
என்ன கவலை என்றே தெரியாமல் போய்விடும்

நாளை மறுநாள் உணர்ச்சி மிகுந்த பாடலை கேட்டு
இரண்டு நாட்கள் இடைவிடாமல் ஓடுவாய்

மீண்டும் திக்கி திணறி பெருமூச்சு விட்டு முடங்கிடுவாய்
மீண்டும் கவலைகள் சூழ்ந்து கண்ணீர் வடிப்பாய்

மீண்டும் மெல்ல மெல்ல புன்னகை புரிவாய்
மீண்டும் உணர்ச்சிப் பொங்கிட துள்ளி எழுவாய்

இந்த வாழ்க்கை இவ்வளவு தான் என்று
மறுபடியும் சலித்துக் கொள்வாய்

மானிடனாய் பிறந்திட்ட இம்மண்ணில் எவருமே



கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை

# முதலிடம் உழவனுக்கே!

எல்லோரின்
பசியைப் போக்க
எப்போதும்
உழைக்கும் விவசாயி
தப்பேதும் செய்யாமல்
தலைமுறை
தலைமுறையாய்
வீழ்ந்தே கிடக்கிறான்

அவனது முதுகு
குனிந்தால்தான்
நாடே நிமிரும்



வாழும் கடவுள்களை
வரிசைப்படுத்துமாறு
என்னிடம் சொன்னால்
முதலிடத்தில்
உழவனையே உட்காரவைத்து
அழகு பார்ப்பேன்.

கவிஞர் பாக்யபாரதி,தருமபுரி

# திசைகாட்டிகளுக்கு

அறியாமை இருளகற்றி
அறிவுப் பாலூற்றி
அகக்கண் திறந்தவர்கள்
அன்பின் ஆசான்கள்




தாயின் கருவறையில்
உயிரைப் பெற்று
ஆசானின் வகுப்பறையில்
அறிவைப் பெற்றோம்

எண்ணும் எழுத்தும்
கண்ணெனப் போதித்து
எண்ணிய இலக்கை
அடைந்திட உதவினீர்

மாணாக்கர் எம்மில்
அக்கறை கொண்டு
மாண்புடன் தினமும்
உற்சாகம் தந்தீர்

இன்னல்கள் களைந்திடும்
ஆற்றலை விதைத்து
இதயத்தில் எம்மைத்
தாங்கிப் பிடித்தீர்

நாம் காணும் வெற்றிகளுக்கும்
அங்கீகாரப் புகழ்களுக்கும்
முதற் சொந்தக்காரர்கள் நீங்களே

திசைகாட்டிகளே!
நீங்கள் மட்டும் இல்லையென்றால்
நாம் என்றோ தரிசாய்ப் போயிருப்போம்

வண்ணங்களில் வாழ்வைத் தோய்த்து
எங்கள் எண்ணங்களை அழகாக்கினீர்கள்

திண்ணிய நெஞ்சுடன்
நேர் கொண்ட நடையுடன்
உலகை வலம்வர வழிகாட்டினீர்கள்

உன்னதமான இத்தினத்தில்
உங்களை வாழ்த்துவதில்
அகம் மகிழ்கிறேன்

ஆசான்களே நீங்கள்
நோய் நொடியின்றி
வாழ்ந்திட வேண்டும்
படைத்தவன் அருள்
கிடைத்திட வேண்டும்
மாணாக்கர் எதிர்காலம் மிளிர்ந்திட வேண்டும்
இதயபூர்வமான ஆசிரியர் தின வாழ்த்துகள்

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,இலங்கை

# நெருப்புடா

மனித நாகரிகத்தின்
முன்னுரை!
சிக்கி முக்கிக் கல் முதல்
சிறு தீக்குச்சி உரசல்
அனைத்து உரசல்களிலும்
அறிமுகம் செய்யப்படும்
சூடான செந்துளி!
நெருப்புடா! நெருப்புடா!

தீக்குச்சி இல்லாமலும்,
பற்றிக் கொள்ளும்
சின்னஞ்சிறு கண்களிரண்டும்
உரசிக்கொண்டால்
இரு நெஞ்சங்களுக்கிடையான
காதல் தீ!

பணம் படைத்தவனோ,
பசியற்ற உணவு வேளைக்காக
வரிசைப்படுத்தி விருந்தை
உண்ணத் தலைப்பட,
என்றென்றும் அணையாத
பசித்தீயுற்ற
ஏழையவன் வயிறு!
நெருப்புடா, நெருப்புடா!

யாகங் குண்டங்களின்
புனிதச் சாம்பலுக்காய்
எரிக்கப்படும் பட்டும்
பீதாம்பரமும், பழமும்
பாதாம்களும்
நெருப்பில்லாமல்
புனிதப் புகையும்
படர்ந்திடுமோ!



கருப்பை நீரே
நம்மைச் சுமந்தாலும்
இறுதியில் ஒரு பிடி
சாம்பலை மட்டுமே
மிச்சப்படுத்திடும்
நெருப்புடா! நெருப்புடா!

வெளியிடப்படாத
லட்சியங்களையும்
உள்ளத்தில் தேக்கி வைத்திட
கொழுந்து விட்டெரியும்
கனவுத் தீயும்
ஓர் நாள் சாதித்துக்
காட்டிடுமே!

குப்பைகளையும்
எரித்திடும்,
குடும்பங்களையும்
எரித்திடும்
பகைமை என்னும்
நெருப்புடா! நெருப்புடா!

சாத்வீகமாக சோறு
சமைத்திட மட்டுமே
நாமும் கேட்டுக்கொள்வோம்
நமது சின்னஞ்சிறு
தீப நெருப்பினை!

கவிஞர் மலர் அபி

# சிலப்பதிகாரம் (எட்டு)

8. வேனிற் காதை
1. மாதவியின் தனிமை
வட வேங்கடமும் குமரிக் கடலும் வடக்கும் தெற்குமாகும்
கடலாடும் பக்கங்கள், எல்லையாகக் கொண்ட தமிழ் நாடு
தடமாறாத புலி, மீன், வில் அம்பு கொடிகள் பறக்கும் நாடு
இடம் தேடி வரும் உலக வணிகர்கள் வரவேற்று மகிழும் நாடு

மாட மாளிகைகள், தேரோடும் வீதிகள் கொண்டது மதுரை
கூட நெசவு பாவு சேர்ந்து ரக ரக ஆடைகள் தரும் உரையூர்.
ஆடல் பாடல் ஆரவாரம் நிறைந்த கடல் ஆடும் பூம்புகார்.
சூடாமணி ஒலிக்கும் வஞ்சி போன்ற நகரம் சூழ்ந்த நாடு.



விளையாட்டு வினையாக பிரிந்து வந்த வேதனையில் மாதவி
வளைகரங்கள் வாட ஊடலில் தவித்து தனிமையில் வாடினாள்
வேளையோடு கூடலில் பின்னி பிணைந்து மகிழ்விக்க வருவான்
சளைத்தல் இல்லாமல் அழகு மிளிர காத்திருந்தாள் மாதவி

2. மாதவி கோவலனுக்கு எழுதும் கடிதம்.
பாடிக்கொண்டிருந்த மாதவி மனதில் கோவலன் நினைவுகள்
வாடும் காதல் நோயில் உடலும் உள்ளமும் மெலிந்தாள் அவள்
தோடி ராகத்தில் அவனுடன் கலந்து உறவாடியது கனவா நனவா
சோடி தேடி நோக்கும் இடமெல்லாம் நீக்கமற கண்டாள் அவனை

கூடி இருந்தவர் பிரிந்தாலும், பிரிந்தவர் மறந்து துறந்தாலும்
ஓடி வந்து அம்புவிடும் கரும்புவில் மன்மதனையும் காணோம்
மாடியில் வீசும் தென்றல் அனலாக, வான் நிலவும் சூடானதேன்
தேடி வருவானா தன் ஏக்கத்தை எழுத்தாக்கி கடிதம் எழுதினாள்

அன்புள்ள காதலனே ஆசையில் ஓர் கடிதம் நீ வருவாய் என
துன்பத்தில் தவிக்கவிட்டு சென்றாயே இது தகுமா நியாயமா
அன்பான கடிதத்தை தோழி வசந்த மாலையிடம் கொடுத்தாள்
"என் சோகம் நீ அறிவாய் எடுத்துக் கூறி அழைத்துவா அவனை"

3. கடிதமும் கோவலன்;
தேடிச் சென்ற கோவலனை தோழி கடை வீதியில் கண்டாள்
வாடி வதங்கிய மாதவி எழுதிய திருமுகத்தை கொடுத்தாள்
கூடி வாழ்ந்த அவளை மனதில் இருந்து நீக்க விரும்பினான்
நாடிச்சென்று கொடுத்த மடலை வாங்க மறுத்தான் அவன்.

"ஆடல் அழகியின் வசீகரத்தில் என் நிலை இழந்து பித்தானேன்
கூடல் போதையில பாதம் பணிந்து அவள் அடிமையானேன்
விட முடியாத ஆசை வலையில் சிக்கி மீளாத மீனானேன்
தடம் மாறிய நான் உணர்கிறேன் அவள் பலே நாடகக்காரி"

"வா என்றால் வரவும் போ என்றால் போகவும் செய்தனளே
மாயம் புரியும் மாயக்காரி அவள் கபட நாடகம் புரிந்தனள்
காதல் போரில் அவளை வெல்ல ஆள் இல்லை இவ் உலகில்
போ, கூறு, மனம் தெளிந்த கோவலன் இனி வருவான் இல்லை"
4. மாதவி காத்திருந்தாள்;
திருமுகம் ஒருமுகமானது கேட்டு விதிர்த்து அதிர்ந்தாள் மாதவி
"வருவான் என் வாசனை இல்லாமல் அவனுக்கு உறக்கம் ஏது
ஒரு நாளும் என்னைப் பிரியாத அவன் மார்பில் முகம் புதைத்து
தருவான் இன்பம்" என கையறு நெஞ்சத்தோடு காத்திருந்தாள்.

--- தொடரும்


**கவிஞர் திருக்காமு**

# பெரியவர்

பலரது
வெவ்வேறு குற்றச்சாட்டுகளோடு வாழ்ந்திடும்
ஊர்ப் பெரியவர்

இன்முகத்தோடு
பதினாறு வயது இளைஞனின்
வேகத்தில் ஓடிவந்து
கைகள் பற்றி அழைத்து போய் அருகிலமர்ந்து
வெகுநேரம் பேசுகிறார்

அவ்வளவு நேரமும்
வழியில் சந்தித்தவர்களின்
வெவ்வேறு கூற்றுகள்
அத்தனையும் பொய்யாக்கி
மனதின் ஏதோவொரு இடத்தில்
சிம்மாசனமிட்டு அமர்ந்தவர்



விடைபெறும்
கடைசி வினாடியில்

தம்பீ நீங்க
நம்மாளுதானே!
எனச்சொல்லி விழுங்குவதற்குள்

மனதினுள் மாபெரும்
உயரத்திலிருந்தவர் சட்டென்று
உடைந்த கண்ணாடித் துகள்களாய்
சிதறி விழுந்திட

பூசிய அரிதாரம் கலைந்து
உண்மை வெளிச்சமானது.

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# அதிரச அதிசயமே



கண்களின் ஒளியில் கதிராய் அடைந்தாய்
கனவிலும் பிரியம் கனதியாய்ப் பொழிந்தாய்

விழிகளின் தீண்டலில் நேசம் கோர்த்தாய்
விண்ணிலே நானும் சிறகை விரித்தேன்

வழிகள் தோறும் புன்னகையின் பூக்கள்
வழிந்தே ஓடிடும் ஆனந்த கங்கை

இதயம் நிறைந்திடும் நினைவின் உதிரமே
இறுதி மூச்சும் உனக்கே மதுரமே

இனியவள் நீயே இசைத்திடும் நாதமே
இறுகிய உறவில் இணைந்திட்ட அன்றிலே

பழகிய ஞாபகங்கள் பொக்கிஷமே என்கூட்டில்
பார்வை மொழிகளும் கவிதைகளாய் இதயவேட்டில்

இதழ் வார்த்தைகள் வேதமாய் எந்நாளும்
இனிய நிஷ்டையில் ஆழ்கிறேன் தன்னாலே

கவின் கொஞ்சும் அழகின் தீபமே
காதலின் சுடரால் கவிந்திட்ட வானமே

அன்பே அழகே அதிரச அதிசயமே
அடியெடுத்து வைத்தாய் எந்தன் வாழ்விலே

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# மாமாவின் மனதிலே

வயவோர வரப்பிலே கண்டாங்கி சேலையிலே
நடந்தஅழகை ரசித்தேன் புள்ள
பார்த்ததும் மனசு தவிக்குது புள்ள
ஆற்றங்கர ஓரத்திலே தூக்கு சட்டியிலே
கருவாட்டு வாசம் தூக்குது புள்ள
உன் மடி மீது தலை
தலை சாய்ந்து படுக்கையில் கவலை
எல்லாம் மறந்து போயிட்டு புள்ள
சுருக்கு பை காசோடு நிற்கையில்
மல்லிப் பூவை வாங்கையில் மாமன்
மனசும் சேர்ந்து மணக்குது புள்ள
ஆத்தா வைத்த மருதாணி உன்
கையில் சிவக்கையில் மாமன் முகத்தை
பார்த்துக் கிட்ட இருப்பே புள்ள
பரிசம் போட சொல்லி அனுப்பி
நாளாச்சு ஊரே கூடி நிற்கையில்
பதில் விரைவாய் சொல்லடி புள்ள
நித்தமும் நினைத்து கனவு கண்டு
கனவிலே வாழ்கிறேன் நிதமும் புள்ள
தெம்மாங்கு காற்றும் சம்மதம் தெரிவிக்க
கெட்டி மேளம் கொட்டி ஆசிர்வாதத்துடன்
கல்யாணம் நடக்கையிலே மாமன் மனசு
குளிராய் குளிர்ந்து நின்றது புள்ள
கிராமிய வாசத்தோடு மண் வாசமும்
மணந்து திருமண ஜோடியை வாழ்த்தியது



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# இப்படித்தான்

சில நேரங்களில்
சில சொற்கள்
புரிதலைப் பிழைக்கச் செய்துவிடுகின்றன
சொற்கள் கற்களாவது இப்படித்தான்.

சில நேரங்களில்
சில சம்பவங்கள்
காட்சிப்பிழைகளை அரங்கேற்றி விடுகின்றன
சம்பவங்கள் வம்புகளாவது இப்படித்தான்



சில நேரங்களில்
சில சம்பாஷணைகள்
தவறாய்ச் செவியேற்கப்படுகின்றன
சம்பாஷணைகள் அம்புகளாவது இப்படித்தான்

சில நேரங்களில்
சில புன்னகைகளை
கண்கள் தவறவிடுகின்றன
புன்னகைகள் புண்களாகிவிடுவது இப்படித்தான்

கவிஞர் மக்கொனையூராள்

# அழுக்காறாமை

**அதிகாரம் : 17**

அகத்தில் பொறாமை இல்லா வாழ்வு ஒழுக்கம்
பண்புடையோர் பெரும் பேறு அடைவார்கள்
பிறர் உயர்வுதனைக் கண்டு பொறாமைப்படாதீர்

பொறாமை உடையோருக்கு
தீமைகள் செய்ய பகைவர்கள் வேண்டாமே
அவர்களின் இக்குணமே
அவருடைய வாழ்வை வீழ்த்தி விடும்




வறியவருக்கு கொடுப்பதைக் கண்டு
உள்ளம் பொறாமை படுமெனில்
அவருக்கு சுற்றமும்,உணவும்,உடையும்.
கை சேரா

சீதேவி கூட தன் தமக்கையான
மூதேவியை பொறாமைப்படுவோரிடம்
கை காட்டி விட்டது அகன்று விடுவாள்

பொறாமை ஒருவனைத் தீய வழியில் செல்ல வைக்குமே
அவனின் செல்வத்தையும் அழித்து விடுமே

ஆனால் இவனின் வாழ்வு வளமாக
இருப்பதுதான் ஏனோ? எவ்வாறோ?
பொறாமை குணம் இல்லாத வரின்
வாழ்வில் தீரா வேதனைதான் ஏனோ?
ஆராய்ந்து பார்த்தோமெனில்
பொறாமை கொண்டோர் உயர்ந்தோர் அல்ல
புகழ் மங்கி வீழ்பவரும் இவர்களே

கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# விலைவாசி உயர்வு

பசியால் அழும் குழந்தைக்கு
பாலில்லை
பக்கத்து வீட்டு நோயாளிக்கு
மாத்திரை இல்லை
விண்ணைத்தொடுகிறது
விலைவாசி.

போரினால் அழிந்தது பாதி
அரசியலில் ஏமாந்து
வீதியில் இறங்கியதுபாதி
புயலினால் அழிந்தது மீதி
அரிசி பருப்பின் விலையோ
விண்ணைத் தொடுகிறது.
உயர்ந்தது விலைவாசி.



அடுப்பில் வைத்த உலையில்
வற்றியது நீரும்.
விளை நிலங்கள் யாவும்
மாறின வீடுகளாய்
சிறுமழையில் நிறைகின்றன
வெள்ளமாய் வீதிகள்.
அழிகின்றன யாவும்.

போருமில்லை யுத்தமுமில்லை
பட்டிணியில் போராடுகிறது
தட்டிக்கேட்க யாருமில்லை.
போதுமினி இங்கு வாழ்ந்தென்று
புற்றீசலாய் புதுவாழ்வு தேடி
புலம் பெயர்கிறது சமூகம்
விலைவாசியோ தடையின்றி உயர்கிறது.

கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# அன்பு

எழுத நினைக்கிறேன் கவியொன்று
சிந்தனைகள் என்னவோ பலதான்
ஆனால் மனம் தேர்வு செய்ததோ
தனக்கு வேண்டியதுதான்
அது அன்பெனும் மூச்சுக்காற்று
சுவாசிக்கும் ஒவ்வொரு கணமும்
தேடுகிறது மனம்
அது உனதாக இருந்திடாதா என்று
என்றும் காத்திருக்கட்டும் மனம்
காதலெனும் அன்புக்காக
கண்டு களித்த கார்முகில் மேகம்காண.



கவிஞர் பெ.தனலட்சுமி,ஈரோடு

# இயற்கை

மினுமினுவென வானம் சூரியனால் மின்ன
ஒளியால் தகதகவென பூமியும் ஆக
குளு குளு என காற்று அடிக்க
சரசர என புற்கள் ஒன்றோடோன்று மோத



கரகரவாகிய இலைகள் கீழே விழ
சலசலவென ஆறுகள் ஓட
அலை அலையாக அலைகள் மோத
கமகமவென பூக்கள் மணம் வீச

கதகதவென பறவைகள் இரைக்காக பறக்க
கரகரவென குரங்குகள் சேட்டை ஆரம்பமாக
கீச்சுகீச்சு என்று பறவைகள் கத்த
கலீர் கலீரெனெ ஆற்றுநீர் சத்தம் எழுப்ப

குடு குடுவென மிருகங்கள் ஓட
சிலீர்சிலீர் என்று பனிகள் அணைக்க
பொலுபொலுவென வாடிய பூக்கள் விழ
மெதுமெதுவாக மனமும் இயற்கைக்குள் மூழ்கியது

கவிஞர் ஜஸாரா ஜலீல்

# ஆச்சி

அன்னைக்கு நிகரானவள்
அன்பின் மறுஉருவம்
அம்மாவின் அம்மா

அம்மாச்சியாகவும்
அப்பாவின் அம்மா

அப்பாச்சியாகவும்
அவதாரமெடுப்பவள்

ஆச்சி என்னும் ஒற்றை
அழைப்பைக் கேட்டு

அகிலத்தையே காலடியில்
அர்ப்பணிப்பவள் அவள்

அர்த்தமற்றப் பேச்சைக் கூட
அறிவாற்றல் என்றிடுவாள்

அன்பான என் ஆச்சியே
அன்பும் விலகிவிட்டதே
அன்னையாய் இருந்த
உன் மறைவுக்குபின்னே.



கவிஞர் ஷீலாதேவி அருணாசலம்,நாகர்கோவில்

# மனிதர்களின் கண்ணீர் வண்ணம்

காலம் கலங்குதே கல்நெஞ்ச மனிதர்களுடன்
நாளும் பாடுதே வலி நிறைந்த மனிதர்களுடன்
தேடல் தொடருதே முடிவில்லா மனிதர்களுடன்
பாதை முடியுதே நிலையில்லா மனிதர்களுடன்
காதல் தொடரதே கவர்ச்சி மனிதர்களுடன்
காமம் பிறக்குதே களவு மனிதர்களுடன்
புறம் பாடுதே புன்னகை மனிதர்களுடன்
அறம் அழியுதே ஆணவ மனிதர்களுடன்
நீதி அழியுதே சட்டம் எழுதிய மனிதர்களுடன்
லஞ்சம் ஆடுதே மிருக மனிதர்களுடன்
சாதிப்பாடுதே சாதிக்கும் மனிதர்களுடன்
கரம் நீட்டுதே கவலை மனிதர்களுடன்
கவலை இல்லை ஏழை மனிதர்களுடன்
நம்பிக்கை காக்குதே ஏமாற்றும் மனிதர்களுடன்
புகழ் பறக்குதே புரவி மனிதர்களுடன்
ஆக்கம் அழியுதே அறிவாளி மனிதர்களுடன்
கொடி பறக்குதே கோமாளி மனிதர்களுடன்
கோட்டை வசப்படுதே குடிகார மனிதர்களுடன்
நம்பிக்கை அழியுதே  நாடக மனிதர்களுடன்
ரசிக்குதே மனம் நடிக்கும் மனிதர்களுடன்
காலம் முழுவதும் கண்ணீர் மனிதர்களுடன்.



கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# வடுப்பட்ட வஞ்சி

வடுப்பட்ட வஞ்சியிவள் காதல் வயப்பட்டால் அன்று
அரவணைப்பு கேட்டாள் ஆசை மொழிகள் கேட்டாள்
கண்ணாலே பேசிப்பேசி இவளை கவர்ந்து சென்றான்
கற்புக் கலையா கன்னிமனதை கடத்திச் சென்றான்
கழுத்தில் தாலி ஏறுமுன்னே கூடச் செய்தான்
களவியிலே உச்சம் தந்தென்னை உருகச் செய்தான்
மொத்தமாக என்னைப் பெற்று இன்னோர் உயிர்தந்தான்
கருவொன்று உருவாகி தெருவெல்லாம் என் பெயராகிப் போனதே
வீடுவந்த பாடில்லை அவன்பெயரை தவிர தகவல் வேறில்லை.
ஊர்வாய் கல்லாகிப்போனதே நாருசிக்க கனியாகிப்போனேனே
மரியாதைகள் குறைந்ததே எனைப் பார்க்கும் விதம் மாறியதே
வீடுவந்து கேட்கிறான் விலைமாதாய் பார்க்கிறான் என்னவலம்
வீதியிலே போகையிலே விடுதிக்கு விலைப்பேசி அழைக்கிறான்
அன்னம் கேட்டுப் போகவில்லை அண்ணத்தாலே தூற்றுரார்
விதியாலே ஆனதோ மதிகெட்டுப் போனதோ இன்நிலை வர
கற்றகல்வி பயனற்றுப் போனதே காமன் முன்னே
பட்டபாடு பெரும்பாடமாகிப் போனதே கற்றுக் கொண்டேன்
என்நிலையிலும் தன்னிலை மறவாதே பெண்குலமே.



கவிஞர் கோ.தனுசன்,மட்டக்களப்பு(இலங்கை)

# நான் பெற்ற யோகமும்

## நான் பெற்ற யோகமும்
## பெறும் யோகமும்

இப்பிறவியில்
நான் பெற்ற யோகமோ !
அஷ்டலட்சுமிகளும் ஒன்று சேர்ந்து
ஒரே லட்சுமியாக பெற்றதே - அதுதான்
என்னைப் பெற்றெடுத்த தெய்வமும்
தேவதையும் - என் தாய் லட்சுமியே!

இப்பிறவியில்
நான் பெறும் யோகமோ!
என்னைக் கருவறையில் சுமந்தத் தாயைக்
கவிதை வரியில் சுவைக்க விரும்பவில்லை - மாறாக
இப்பிறவியில் ஆணாகவோ, பெண்ணாகவோ
சுமக்க விரும்புகிறேன்.



கவிஞர் முனைவர் க குமார்,சித்தாலிக்குப்பம்

# பட்டணம்

காலை கடற்கரை ஓரம்
உடல் எடையை குறைக்க
ஓடுகிறது ஒரு கூட்டம்.
ஒருவேலை உணவுக்கு
ஒரு கூட்டம்
கண்கவரும் கண்ணாடி
கட்டிடங்கள் கட்டும்
பட்டதாரி ஒருபுறம்
எப்போது நாம் இப்படியொரு
கட்டிடம் கட்டுவோம் என
கனவுகளில் மறுபுறம்
ஐம்பது ரூபாய்க்கும் இட்லி
ஐந்து ரூபாய்க்கும் இட்லி
கடவுள் ஊர்வலமும்
போராட்ட அணிவகுப்பும்
ஒருபுறம்.
தூய்மை கவனிப்பில்
பணியாளர் ஒருபுறம்
கண்டுகொள்ளாது பயணிக்கும்
கடிகார முள் திருப்புதலில்
ஒருபுற மக்கள்
யாவும் இங்கு இயல்பாய்
காணலாம்.




கவிஞர் ரை. ஆனி, செஞ்சி

# நினைவூட்டல்

யாரேனும் மறந்திருந்தால்
எனை
ஞாபகம் கொள்ளுங்கள்

யாரேனும் கொடுத்திருந்தால்
பெற்றுக்கொள்ளுங்கள்



சென்றவரெல்லாம்
கண்டிப்பாக
திரும்பி பார்க்க எண்ணாதீர்

திரும்பிய இடத்திலெல்லாம்
ஒரு செடியொன்றை நட்டுவித்து
நகருங்கள்

உண்மையை உரக்க சொல்லுமுன்
உண்மையாவென
ஆராயப் பழகுங்கள்

ஆற்றலான மனிதனிடம் கண்டிப்பாக
அரைமணி நேரம் பேச்சுக்கொடுங்கள்

இப்பொழுதாவது
யாரேனும் மறந்திருந்தால்
எனை நினைவுப்படுத்திக் கொள்ளுங்கள்.


கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# நானும் அழகு தானே

செல்லமாய் தூறும்
சாரலும்
சிணுங்கி எழும்
பரிதியும்
சித்திரமாய் இதழ் விரிக்கும்
முளரியும்
பேரழகானால்.

திங்களுக்கு திங்கள்
மலரும் பெண்மையோ!
பருவத்தால் பொழுயும்
வெண்பனியோ!
ஒன்றென கருதினும்.

கோடையில் மரத்தோடு
ஒழிந்தோடும் பாதங்களும்.
ஆழியவன் அலைகளின்
தீண்டலுடன் விளையாடும்
மழலையின் நகைப்பும்
அரிதானதோ!




கருமேகம் சூழ
கெட்டி மேளத்தோடு
வாழ்த்துமடல் தூவும்
மாரியவன் சாட்சியாக
நானும் அழகு தான்

என் கண்ணாடி சொன்ன
நிதர்சனத்தில் முதல் நம்பிக்கை.
இல்லையேல்,
பிறை அவனிடம் நான் சுகிக்க
சாளரமும் மடி தரும்
மாயம் யாதோ!?

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# ஏதிலி

அடைக்கலம் தேடி
அடையாளம் தொலைத்த
அலையோடி வாழ்க்கை!

ஆழி தாண்டும் பறவை
அடவி நம்பி செல்லும்!
கணியன் தந்த நம்பிக்கையில்
கோடு கடக்கும் ஏதிலி!

நிலமற்ற ஏதிலி
மன வலி அறிந்து
முகவரி தந்த வெளி!



கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு

# ஓர் விடுமுறை நாளில்

அமைதியான அந்த
ஆலமர நிழலில்

சலசலக்கும் அந்த
கிளைகளின்
சத்தத்தில்

அருகே ஒடும்
நீரோடையின்
சிரிப்பில்

தொலைவில் பாடும்
குயிலின் ஓசையில்

ஆரவாரம் செய்த
கூட்டத்தின்
மத்தியில்

ஆசையாய் தென்றல்
அவள் வந்து
அலையலையாய்
உன் கேசம் கோத

நெற்றியில் நீ
வைத்த சந்தனமும்
குங்குமமும் பேதை
அவளை சீண்டி
விளையாட

கண்களில் குறும்பு
மின்ன ஒரு
புருவத்தை ஏற்றி

இதழ்களின் சிரிப்பை
கன்ன கதுப்பிற்குள்
அடக்கி

ஏர் பிடித்த கைகள்
முறுக்கி இருந்த
மீசையை இன்னும்
நன்று முறுக்க

வலது கையில்
வெள்ளிக் காப்பு
உன் தேகம்
போல் மின்ன



அவளுக்கு பிடித்த
கரு நிற சட்டை
அணிந்து வெள்ளை
நிற வேஷ்டி கட்டி

காதல் வழியும்
உன் காந்த கண்
பார்வையில்

ஒற்றை கண் சிமிட்டி
நீ பார்க்கும் போது
மயங்கி நிற்கிறாள்
மங்கை அவள்

ஓர் விடுமுறை நாளில்

கவிஞர் ரதி ஜெயராஜ்,தென்காசி

# தினசரி ஒத்திகை

அதிகாலையில் எழுந்திட அழகாயொரு ஒத்திகை
அடுத்ததாய் பணிதனை துவங்கிடவும் ஒத்திகை
விடிந்ததும் உடற்பயிற்சி செய்திடும் அனைவரும்
தினசரி ஒத்திகையால் பலம் பெற்றிடுவாரே

பணிகளில் நேர்த்தி அச்சத்துடன் ஒத்திகை
பரிதவிப்பதைப் பார்த்திட வேண்டாமே ஒத்திகை
கையூட்டில்லா கரமதைக் கண்களில் காண்போருக்காக
கண்ணியமதைக் காப்பாற்ற கடமையுடனோர் ஒத்திகை

முதல் காதலை வெளிப்படுத்த முன்னேற்பாடாய்
முத்தான வார்த்தைகளே முதல் ஒத்திகை
சின்னஞ்சிறு மழலையைக் கரங்களில் ஏந்திட
ஆண்மகனிற்கோ நிதம் நிதம் ஒத்திகையாம்

மழலைகளுக்கு உணவு ஊட்டிட அன்னையருக்குத்
தேவைதான் நிதம் நிதம் ஒத்திகை
சமையலில் அசத்தும் நோக்கில் சமைக்கும்
உணவுகள் நிதம் நிதம் ஒத்திகையாம்



படுத்தால் உறங்கும் உறக்கம் வந்திட
ஓதுதல் நிதமும் ஒத்திகை தானே
உடன் இருப்போரை உடன் மதித்து
புறத்தில் உள்ளோரை புறஞ்சொல்லாது விடுத்து

அனைவரிடமும் அன்புடன் கருணை கலந்து
இதமாய் பழகிட வேண்டும் ஒத்திகை
தினந்தோறும் ஒத்திகையால் தவறில்லா நற்செயல்
வாழ்விற்கு தேவைதான் தினசரி ஒத்திகையும்

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# பொறுமையின் முடிவு வெற்றி

எழுதுகோலின் கிறுக்கலால் எழுத தொடங்கினேன்
எண்ணற்ற செய்திகளை படித்து
என்னுள் தோன்றும் உணர்வுகளை எழுத்தாக்கி
படித்து மகிழ்ந்தேன்
இதெல்லாம் உன்னால் முடியாது
என்று கூறிய போதும்
எனதான வரிகளை
எழுத்தாக்கி கொண்டே இருந்தேன்
எல்லா எதிர்ப்புகளையும்
எதிர்த்து நின்று காட்டினேன்
அமைதியாய் என் இலட்சியத்தினை நோக்கி
நீண்ட பயணம் மேற்கொண்டேன்
பொறுமைக்கு பரிசாக
என்னை அலட்சியப்படுத்தினோரின் முன்னே
இன்று ஒரு எழுத்தாளராக நிற்கிறேன்
பொறுமையை கடைப்பிடி
உனக்கானது சரியான நேரத்தில்
உன்னை தேடி வரும்!



கவிஞர் மோனிஷா

# நாளைய விடியல்

கொதிக்கும் வெயிலும் தகிக்கும் பகலும்
நிறைந்தே நின்றாலும் வாழ்தலின் பயணத்தில்
தலைகுனியா பயிர்களின் தீவிர உழைப்பில்
வல்லூறுகள் வட்டமிட்டும் குஞ்சுகளை வளர்த்திட
வெளியினை விரித்து நிற்கும் தாய்மையில்
அழுதும் துவண்டும் வளரும் தருணத்திலும்
மழலையின் மனதினை புண்படுத்தா அன்பினில்
மலையின் தாய்ப்பாலென வழிந்திடும் மழையின்
பயணத்தில் தம்மை உயிர்ப்பிக்கும் வனங்களில்
காணும் காட்சியிலே கண்ணுறும் அழகினில்
பேணும் உறவுகளில் பிணைந்திடும் பாசத்தில்
தலைமுறை தாண்டி பண்பாட்டை நீட்டிக்கும்
பெரியோரின் வழியினிலே விளைந்திடும் குணத்தில்
அறிவின் தளத்தில் உணர்ந்திடும் வாழ்வினில்
வெற்றியின் வரவில் பெருகிடும் நம்பிக்கையில்
நாளும் புலர்ந்திடும் நல்லதொரு விடியல்.



கவிஞர் இளையவன் சிவா,நரசிங்காபுரம்

# உதிரும் சருகுகள்

மலைபொழிந்த மாலைப்பொழுதில்
வெறும் காலில் பதியமிட்டு செல்லும்
உன் பாத பூமத்திய ரேகைக்குதான்
இந்த பூமியும் இந்த மனமும் தவம் கிடந்தனவோ

இலையில் வழியும் மழைத்துளி யென
உன் நினைவுகளில்
சில சமயம் வழிந்து குழைந்து
தொலைந்து போகிறேன்

உதிரும் ஓர் சருகின் நிலையென
பிரிவுகளில் நாட்கள் கடந்தாலும்
பிரிவின் பின் மீண்டும்
தொடரும் பேச்சுகளில்
சொற்களெல்லாம்
தடையின்றி இயல்பாகவே
வந்துவிழுகின்றன
அதே இலையின் நிலையென



இந்த கரிசல்காட்டு மனதில்
உன் அன்பெனும் தூறல் எப்போதும்
நனைத்தவாறே இருக்கட்டும்.

கவிஞர் ச.இராஜ்குமார்,திருப்பத்தூர் மாவட்டம்

# துளிப்பா

**வாடகைத் தாய்**

உயிரினை பணையம் வைத்து
உயிரினை பெற்றாலும்
உறவேதுமில்லா
உன்னத தியாகி.

**இளமை**

பார்த்துக் கொண்டிருக்கும் போதே
பளபளப்பெல்லாம்
பட்டென
காணாமல் போகும்
மாய பிம்பம்.

**அவன்**

அத்தனை அன்பினையும்
அடிமனதில்
புதைத்துவிட்டு
திமிரை மட்டுமே
அடையாளமாக்கியவன்.

**அவள்**



தன் அழகினை
உனக்களித்து
பேரழகான தாய்மையை
தான் ஏற்று
உனக்கான அந்தஸ்தை
உலகினில் தந்தவள்.

கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# பறத்தல்

கண்களைக்
கட்டிக்கொண்டு
காணாத
தூரம் வரை
கற்பனைக்
காற்றினில்
பறக்கிறேன்
கடந்த கால
நினைவுகளுடன்.



கவிஞர் அகல் தாமரை "கவி",கமுதி

# மனக்குயிலின் மௌனகீதம்

எந்நேரமும் இசைக்கும்
பெருங்கடலின் பெருவொலிதனை
பேரிரைச்சல் எனும் பெருந்துயர் பொழுது
வனாந்திரம் தேடும்
கானக் குயிலோசை
பசுஞ்சேலையுடுத்தி பார்வைத்
தொடும்தூரம் நடந்தாலும்
மனத்தோகையில் விரியும்
மாயத் தோற்றத்தையே
மனமது நாடும்
வானவர் போற்றும்
பிழையறியா காதலில்
நீளச் சாலையும்
நீலச் சேலையுடுத்தும்
தேவ கன்னிகையின்
களி சோலையதுவாம்
ஆடாத ஆட்டமெல்லாம்
ஆடி முடிக்கும் வரை
உள்ளூர மின்னும்
மாயங்கள் கலைந்ததும்
ஏதோமௌனமாகி
கடந்தகால நினைகளில்
கடக்கும் எண்ணத்தில்
கடக்காமலே தேங்கும்!



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# சடுகுடு

ஏதோ நினைவுகள்
கண்ணில் பொங்கும்
ஊற்றின் காரணமறியாது

மனக்காட்டிலே
மலர்ந்தும் மலராமலும்
வெம்பிய எண்ணங்கள்
தலைநிமிர்த்தி கலங்கடிப்பதில்
ஆடும் உள்ளங்கள்

குழலிசையின் மீட்டலின்
சற்றே சாந்தம்
விடுபடுமோ விடை கிடைக்காத
தீர்க்கப்படாத தீர்வுகள் பல



வரிசையில் வசமிழந்து
எட்டிடும் வேலையில்
எதிலும் மட்டுபடாத நினைவுகள்
அசையாமல்
ஆதிக்கவாசலில்

இறைவன் கணக்கை
யாரறிவார்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# நீராம்பல்

கல்லடி பட்டாலும்
கண்ணடி படக் கூடாதாம்
கண்ணே!
உன் கண்ணடி
படக் காத்திருக்கிறேன்!
என் இதயக் குளத்தில்
ஏனடி கல் எறிகிறாய்?
கடற்கரைப் பூவென்பதால்
அலையலையாய் என் நினைவில்
புரண்டு ஓடுகிறாய்!
உன் விழி அழகில்
வீழ்ந்து விட்டேனடி !
மயக்கத்தைத் தெளிவிக்க வந்த
மருத நிலத்துப் பூ மகளே
என் நெஞ்சத் தடாகத்தில்
மூழ்கி மணம் வீசடி
என் கண்ணே!
குளிர் நிலவாய் நான்
இருக்க என் முகம்
பார்த்து மலர்ந்து விடு கண்ணே!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை-119

# தன்முனைக் கவிதைகள்

தாமரைக் குளத்தில்
நீராடுகிறாள் அந்திமந்தாரை
மழைத்துளிகளாய் மாறுகிறேன்
செம்மர தேகத்தை அளவெடுக்க


மழை ஈன்ற குமிழிக்குள்
அவளும் நானும்
தென்றல் சுமந்து செல்ல
குடியேறுகிறோம் நிலவில்

பாதங்களை நனைக்கும்
கொலுசுகட்டிய சிவப்புபனம்பழம்
சிற்றோடையின் நீரெல்லாம்
சித்திரை மாதத்துப் பதநீராய்



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# உதிரம் ஒன்றான பின்



உணர்வுகளுக்குள் புதைந்து
இரண்டறக் கலந்தனையோ
உறவென உளமதில்
இறுகப் பிணைந்தனையோ
உறவே உயிரே இனிவருமோ
நம்மிடையே பிரிவினைதான்.

இறுதி வரை இறவா
இதயமென இணைந்தனையோ
காலம் கடந்தாலும்
கண்ணெனக் காத்தனையோ
உறவே உயிரே இனிவருமோ
நம்மிடையே பிரிவினைதான்.

உடலும் உள்ளமும்
பொருந்திட சேர்ந்தனையோ
உதிரம் என்னுள்
ஊடுருவச் சேர்ந்தனையோ
உறவே உயிரே இனிவருமோ
நம்மிடையே பிரிவினைதான்.

இன்பம் துன்பம்
இரண்டிலும் இணைந்தனையோ
கைகள் கோர்த்தே
தடைகளைக் கடந்தனையோ
உறவே உயிரே இனிவருமோ
நம்மிடையே பிரிவினைதான்.

கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# கவிதைத் துளிகள்



தொடுதிரை
தாண்டிய
விரல்களுக்கே
நிலா முற்றங்கள்
பரிசாகின்றன

போராட்டங்கள்
எதுவாயினும்
அறவழிச்
சாலையிலேயே
அர்த்தமாகின்றன

குழந்தைகளின்
முதலும் கடைசியுமான
எதிர்பார்ப்பு
உங்களின்
சிறிது நேரம்
மட்டுமே

மழை
பெய்தலின் பலனாய்
எதை சுமந்தாலும்
குருவிகள்
குளிக்கின்றன

இலக்கு
ஆழ் கடலில்
மூழ்கிக் கொண்டிருக்க
முயற்சி இன்னும்
அலைகளில் கூட
கால் நனைக்கவில்லை

கவிஞர் அன்னலட்சுமி சரவணன்,ஈரோடு

# அன்னையின் அறிவுரையோ?

அன்னையின் அன்பை உணர்த்துகின்ற படமிதுவே!
என்னுடைய கற்பனையில் எழுகின்ற கருத்துகளை
தான்சுமக்கும் குட்டியிடம், தாய்க்குரங்கு உரைப்பதுபோல்
பின்வரும் வரிகளிலே புனைகின்றேன் கவிதையொன்றை!

மனம்போல் திரிந்து வனங்களில் வாழ்ந்திருந்தோம்!
வனங்கள் அருகுவதால் வாழ்விடத்தை மாற்றுகின்றோம்!
மனித இனத்தின் முன்னோடி நம்மினமே!
மாறுகின்ற காரணத்தால் மனித மனங்களை
குரங்கென்று மானிடர்கள் உரைப்பது விந்தையன்றோ?!

சேட்டைகள் எதுவெனினும் சேர்க்கின்றார் அடைமொழியாய்!
அண்ணல் காந்தியிடம் கண்ணை, வாயை, காதை மூடிய
மூன்று பொம்மைகளாய் நாமிருந்தோம்! தீயவற்றைக்
காணாமல், பேசாமல், கேளாமல் தவிர்த்திடலை
மானிடர்க்கு உணர்த்தும் மாதிரியாய்த் திகழ்ந்தோமே!



அவதார புருஷனென பெயரெடுத்த இராமனுக்கும்
அவந்தாரம் இருந்த இலங்கைக்குத் தூதுவனாய்
அஞ்சனையின் மைந்தன் சென்றானே! நம்மினம்தான்!
அலைகடலில் பாலம் அமைத்திடவும் உதவினோமே!

வானுயர்ந்த மரங்கள்மிகு வனங்களில் நம்முணவை
இனங்கண்டு பறித்துண்போம்! இனத்துடன் சேர்ந்திருப்போம்!
உயரங்கள் பொருட்டல்ல! மரங்களின் மீதேறி
தாவிக்குதிக்கும் தனித்திறன் நமக்குண்டு! இயற்கையுடன்
இயைந்து வாழ்தலே நம்மியல்பாம்! அறிவாய்நீ!

உழைத்துப் பிழைத்திட்ட உயர்வான தன்மையினை
இழக்கின்றார் மானிடர்கள் இலவசங்கள் பெருகியதால்!
பழங்களை, பல்வகை உணவுகளை நமக்களித்து
மாற்றுகின்றார் நம்மியல்பை மானிடர்கள்! உணர்ந்திடுவாய்!

தனித்தன்மை இழக்காமல் தரணியிலே வாழ்வதற்கு
எந்நாளும் முயன்றிடு! என்விருப்பம் இதுவென்று
மந்தியொன்று உரைக்கிறதோ மடியிலுள்ள குட்டியிடம்!

புகைப்பட உதவி: நண்பர் திரு. சௌந்தர பாண்டியனுக்கு நன்றி

கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# பாரதி ஒரு பொற்குவியல்

பாரதி என்ற மாகவிஞன் நம்மிடையே இன்று
இல்லையே! ஆனாலும் இன்னமும், இதற்கு மேலும்
வாழ்வானே! வாழ்ந்து கொண்டும் இருக்கிறானே?
காக்கையும், குருவியும் எங்கள் ஜாதி என்றவன்
'விடுதலை' பாட்டில் விட்டு விடுதலையாகி நிற்பாயிந்தச்
"சிட்டுக்குருவியை போல"
பரவவோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை.
தன் மனதைப் பெண்ணாக பாவித்து,
புதியது காணிற் புலனழிந் திடுவாய்
புதியது விரும்புவாய் புதியதையஞ்சுவாய்
அடிக்கடி மதுவினை யணுகிடும் வண்டு போல்
பழமையாம் பொருளிற் பரிந்து போய் வீழ்வாய்!
"கண்ணனை தந்தை என்றும், கண்ணனை
சேவகன் என்றும், கண்ணன் என் அரசன் என்றும்,
கண்ணன் என் சத்குரு" வில்
சாத்திரங்கள் பல தேடினேன்- அங்கு
சங்கையில் லாதன சங்கையாம் என்றவன்
'கண்ணம்மா என் காதலி'யில்
தீர்த்த கரையினிலே - தெற்கு மூலையில்
செண்பகத் தோட்டத்திலே
பார்த்திருந்தால் வருவேன்- வெண்ணிலாவிலே
பாங்கியோ டென்று சொன்னாய் என்ற கவி
"கண்ணம்மா எனது குலதெய்வம்" என்ற பாடலில்
நின்னைச் சரணடைந்தேன்- கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்.
துன்பம் இனி இல்லை, சோர் வில்லை, தோற் பில்லை
அன்பு நெறியில் அறங்கள் வளர்த்திட
நல்லது தீயது நாமறியோ!
11 மொழி தனை கற்று
யாமறிந்த மொழியிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம் என்றானே!
பாரதத்திற்கு நிறைய படைத்து விட்டாய்.
விண்ணுலகத்திற்கு உன் சேவை வேண்டும்
என்று அழைத்துக் கொண்டான் இள வயதிலேயே இறைவன்!



கவிஞர் கிருஷ்ணவேணி. ஆ,ஊத்தங்கரை

# ஹைக்கூ


மத்திய பேருந்து நிலையம்
அலைந்து திரிகின்றன
காற்றில் குப்பைகள்.



கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# கவிதை தந்த பேனா

எழுத்தாணி என் கையில் இருக்க
எழுத்தும் எண்ணம் மனதில் இருக்க
காகிதத்தை என் கையில் எடுக்க
கிறுக்கல்களை முதலில் நான் ஆரம்பிக்க
வார்த்தைகள் ஒன்றை ஒன்று கோர்த்திருக்க
புதிதாய் நான் படைத்து இருக்க
கவிதையாய் அது பூத்து இருக்க
எழுத்தின் மீது காதல் எனக்கு இருக்க
வர்ணனைகள் எல்லாம் பிடித்து இருக்க
கவிதையாய் உன்னை வடித்து இருக்க



கவிஞர் சௌ.தாரா,சேலம்

# என்னும் எழுத்தும் கண்ணெனத் தகும்

சொல்வதற்கினிய
காரணம் வெல்வதற்கினிய
மெய்கள் உணர்வதற்கு
பாடம் பட்டறிவியில்
ஞான மெய்யறிவில்
தேர்ந்த பயிலறிவில்
தேடல் கொண்ட
முதல் முயற்சி
எண்ணிய எண்ணங்களில்
கொண்ட
தேர்ச்சி - மொழியறிவில்
பாண்டியம் பெறுவது
உறுதியன்று.
உள்ளத்தால் எண்ணிய உறுதியை
உணர்வால் சேர்க்கும்.
அதன்பால் நிலைநிற்கும்
தகைமை வேண்டும்.




கவிஞர் வியாத்தன் ச.லக்ஷ்ஹரன்


# முகவரி தேடும் காற்று

( நாவல் )

## அத்தியாயம் 1 - அதிகமான லாபம்

அந்த மொத்தக் கம்பெனியின் இயக்குனர்கள் கூட்டம் ("போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ்" கூட்டம்) மிகவும் ஆரவாரமாக நடந்து முடிந்ததும் வெளியே வந்த ஜே.கே யை எல்லோரும் சூழ்ந்து கொண்டனர்.

"என்ன ஜே.கே. நீங்கள் இந்த வருடம் அதிகமான லாபம் வந்திருப்பதால் முப்பத்தைந்து சதவீதம் போன்ஸ் கொடுக்கலாம் என்று அறிவித்திருக்கிறீர்களே? அடுத்த வருடமும் நாம் இதே அளவிற்கு கொடுக்க முடியுமா என்று யோசித்துப் பார்த்தீர்களா?" டைரக்டர் செங்குப்தா கேட்டார்.



ஒரு நிமிடம் மௌனம் சாதித்த ஜே.கே. 'நீங்களெல்லாம் டைரக்டர் என்று சொல்லிக் கொண்டா உட்கார்ந்திருக்கீங்க' என்று கத்த நினைத்தவர்," தன்னைச் சுதாரித்துக் கொண்டு "செங்குப்தா நீங்களும் கம்பெனியின் ஒரு டைரக்டர். அடுத்த வருடம் இதைவிட எவ்வளவு நமது கம்பனி வேலையாட்களுக்கு போனஸ் தரமுடியும். அதற்கு நாம் எவ்வளவு உழைப்பைத் தர வேண்டும் என்று யோசியுங்கள்.மேலும் இந்த அளவிற்கதிகமான லாபம் நம்முடைய கம்பெனியின் ஒவ்வொரு தளத்திலும் பணிபுரிகின்ற ஒவ்வொருவரையும் பிழிந்து எடுத்த வருமானம். அதில் ஒரு பகுதியேனும் திரும்பவும் அவர்களுக்குப் போகவேண்டாமா?" என்று திருப்பிக் கேட்டார்.

''ஜே.கே. போனஸ் கொடுக்க வேண்டாம் என்று சொல்ல வில்லையே நான். ஆனால் முப்பத்தைந்து சதவிகிதம் அதிகம் என்கிறேன்." செங்குப்தா கொஞ்சம் முறைத்துக் கொண்டு சொன்னார்.

கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# முகவரி தேடும் காற்று

( நாவல் )

## அத்தியாயம் 1 - அதிகமான லாபம்

''ஏய்யா நீ வாங்குற இரண்டு லட்ச ரூபாய் சம்பளத்திற்கு பத்தில் ஒரு பகுதியாவது வேலை செய்வாயா? செய்தவனுக்கு கொடுப்பதில் உனக்கென்னக் குறையப் போகிறது? உன் அப்பன் வீட்டு பணத்தையா எடுத்துக் கொடுக்கிறோம்?" என்று திட்ட நினைத்தவர் "மிஸ்டர் செங்குப்தா நேரடியாகவோ, மறைமுகமாகவோ நமக்கு எவ்வளவு லாபம் ஈட்டிக் கொடுத்துள்ளனர். இது ஒரு நன்றிக்கடந்தான்.

முதலில் எல்லோருமே ஐம்பது சதவிகிதம் போனஸ் கொடுக்க வேண்டும் என்று சொல்லிய போது நீங்கள் வெளிநாடு சுற்றிவிட்டு திரும்பினீர்கள். கம்பெனி அளவிட்டதை விட பன்னிரெண்டு மடங்கு அதிகமாக செலவழித்து மாமன் மச்சான் எல்லோரயும் கூட்டிக்கொண்டு சுற்றிவிட்டு வந்தீர்கள். வேலை செய்தவனுக்கு போனஸ் கொடுக்கச் சொன்னால் உங்களுக்கு வலிக்கிறது அப்படித்தானே'' ஜே.கே. கொஞ்சம் வேகமாகப் பேச ''உங்களுக்கு இந்த செங்குப்தாவை மட்டம் தட்டுவதென்பது அல்வா தின்ன மாதிரி அப்படித்தானே?. வாருங்கள் செங்குப்தா என் அண்ணா அப்படித்தான்'' என்று செங்குப்தாவை இழுத்துக் கொண்டு போனாள் ஜே.கேயின் தங்கை பத்மினி..

"பத்மினி நீ ஒரு பெங்காளியைக் கல்யாணம் செய்து கொண்டு.. நீயும் என் தங்கை என்று உன் கணவன் செங்குப்தாவை நான் கட்டி அழுது கொண்டிருக்கிறேன்."

"அண்ணா மெதுவாகப் பேசுங்கள். அவருக்கு தமிழ் நன்றாகப் புரியும். வீட்டிற்குப் போனதும் காச் மூச்சென்று கத்த ஆரம்பித்து விடுவார்."

"இப்படிச் சொல்லியே என்னை அடக்கி விடு. புருஷனை எதிர்த்து பேசாத உண்மையான தமிழச்சி" என்று வெளியே வந்து காரில் ஏறிக்கொண்டதும் மொபைல் போன் பாடியது.

கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# முகவரி தேடும் காற்று

( நாவல் )

## அத்தியாயம் 1 - அதிகமான லாபம்

போனை எடுத்து ''ராணி என்ன விஷயம்?" என்று கேட்டார்.

"உடனே வீட்டிற்கு வாருங்கள். திரும்பவும் நமது மகன் அரசுவைக் காணவில்லை." என்றாள். எதிர் முனையில் அவர் மனைவி ராணி.

"அவன் என்ன சின்னக் குழந்தையா? எஞ்சினியரிங் முடித்து விட்டு என் பிஸினஸைக் கவனிக்காமல் ஊரைச் சுற்றிக் கொண்டு திரிகிறான் அவன். மொபைலில் அவனைக்கூப்பிடு."

"நீங்கள் ஆபீஸ் என்று தவம் கிடக்கிறீர்கள். மூன்று நாட்களாக அவன் வீட்டிற்கு வரவில்லை. செல்போன் வீட்டிலேதான் இருக்கிறது. அவன் எடுத்துக் கொண்டு போகவில்லை. எனக்குப் பயமாக இருக்கிறது."

"அய்யோ நீ ஒரு தொட்டாச்சிணுங்கி. எதற்கெடுத்தாலும் உடனே அழ ஆரம்பித்து விடுவாய். சரி...சரி. நான் கிளப்பிற்கு போவதை நிறுத்தி விட்டு வீட்டிற்கு வருகிறேன். ஆமாம் அவன் நண்பர்கள் வீட்டிற்கு போன் பண்ணிப் பார்த்தாயா?"

"எல்லோர் வீட்டிற்கும் பேசியாகி விட்டது."

"சரி..சரி. அழாதே. நான் இதோ வந்து விடுகிறேன்." என்று தொடர்பைத் துண்டித்து விட்டு திரும்ப அதே செல்போனில் வேறு ஒரு எண்ணைத் தேடி "ஹலோ ஜே.கே. பேசுகிறேன். அரசுவை மூன்று நாட்களாகக் காணவில்லை. வெளியே தெரியாமல் இரகசியமாக கொஞ்சம் தேட முடியுமா?" என்று கேட்கும்போது கொஞ்சம் நடுக்கம் காத்திருந்தது.

"என்ன ஜே.கே. பயந்திருக்கிறீர்கள். நான் உங்கள் வலது கை. இந்த பாபு இருக்கும் வரை ஏன் வீணாக கலக்கம்?. நான் உங்கள் செக்யூரிட்டி ஆபிஸர் மட்டுமல்ல. ஆருயிர் நண்பன். உங்கள் அன்பின் ஆலோசகன். ஏதாவது வீட்டிலே சண்டை சச்சரவுகள் உண்டா." என்றது எதிர் முனை.

சொந்தக் காலில் நிற்க விரும்பும் அரசு.

கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# அ. சிதம்பரநாதச் செட்டியார்

## (கட்டுரை)

**வாழ்க்கைச் சுருக்கம்**



கும்பகோணத்தில் அமிர்தலிங்கம் - பார்வதி என்பவருக்குப் பிறந்தார். அங்குள்ள நேட்டிவ் உயர்நிலைப்பள்ளியில் பள்ளியிறுதி வகுப்புவரை படித்துத் தேர்ந்தார். 1928-ஆம் ஆண்டில் குடந்தை அரசுக் கல்லூரியில், இளங்கலைத் தேர்வில் மாநிலத்திலேயே முதல் மாணவராக தேர்ச்சி பெற்று. "டாக்டர் ஜி. யு. போப் நினைவு" தங்கப் பதக்கத்தை வாங்கினார். அருந்தமிழ்த் தொண்டின் மூலம் முத்திரை பதித்த இவரை தருமபுரம் ஆதீனம், "செந்தமிழ்க் காவலர்" எனும் சிறப்புப் பட்டம் தந்து கௌரவித்தது. தமிழிலும்,ஆங்கிலத்திலும் புலமை பெற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்து முதுகலைப் பட்டமும், முனைவர் பட்டமும் பெற்றவர். 1943-ஆம் ஆண்டு "தமிழ்ச் செய்யுள் வரலாறு" என்ற தலைப்பில் ஆய்வு செய்து, முனைவர் பட்டத்தை முதன்முதலில் பெற்ற சிறப்புக்குரிய தமிழறிஞர் ஆவார்.

1933ல் பெரிய நாயகி அம்மையை இவர் மணம் புரிந்து கொண்டார். அம்மையாரும் தமிழ் எழுத்தாளருமன்றி ஓவியக் கலை வல்லுநருமாவார். இவர் வரைந்த அண்ணல் காந்தியடிகளின் ஓவியம் இன்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியை அணிசெய்கிறது.

# அ. சிதம்பரநாதச் செட்டியார்

(கட்டுரை)

## பணிக்காலம்

சென்னை புதுக்கல்லூரியிலும், பாலக்காடு அரசினர் கலைக்கல்லூரியிலும் விரிவுரையாளராகவும், 1946 முதல் 1958 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றினார். இவரது தமிழ்த்துறைப் பணிகளைப் பாராட்டி பெரியார் 27.7.46 அன்றைய குடியரசு இதழில் பாராட்டுரை வழங்கியுள்ளர். 1948ஆம் ஆண்டில் அப்பல்கலைக்கழகத்தின் இடைக்காலத் துணைவேந்தராக ஐந்து மாதங்கள் பணியாற்றியுள்ளார். துணைவேந்தராகப் பணியாற்றிய, முதல் தமிழ் பேராசிரியர் இவர் தான். பட்டதாரி ஆசிரியர் தொகுதியில் இருந்து, அகாதெமிக் கவுன்சிலுக்கும் தேர்வு செய்யப்பட்ட முதல் தமிழாசிரியர் இவரே ஆகும். சாகித்திய ஆக்காதமியின் உறுப்பினராகவும், மதுரைத் தியாகராசர் கல்லூரியின் முதல்வராகவும் பணியாற்றியுள்ளார்.


மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, இசுக்கொட்லாந்து, பிரான்சு, இத்தாலி, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று, தமிழின் சிறப்பை நன்கு உணர்த்தினார்.1960ஆம் ஆண்டு, உருஷிய நாட்டுத் தலைநகரம் மாஸ்கோ நகரில் நடைபெற்ற அனைத்துலக புலவர் மாநாட்டுக்கு இந்திய நாட்டின் பிரதிநிதியாகச் சென்றார்.

1961ஆம் ஆண்டில் தில்லியில் நடைபெற்ற அனைத்துலக இலக்கியப் பேறிஞர் கருத்தரங்கில் பங்கேற்று, உலக மொழிகளில் விழுமிய தமிழிலக்கியங்களின் செறிவை உலகுக்கு உணர்த்த விரும்பி, ஆங்கிலத்தில் உரையாற்றிப் பெரும் புரட்சியை ஏற்படுத்தி அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தினார். 1964ஆம் ஆண்டு பட்டதாரி ஆசிரியர் தொகுதியிலிருந்து கடும் போட்டிக்கிடையே சென்னை மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# அ. சிதம்பரநாதச் செட்டியார்

## (கட்டுரை)

தம் இறுதிக்காலத்தில், மதுரை தியாகராசர் கலைக்கல்லூரியின் முதல்வராக 1965ஆம் ஆண்டு முதல் 1967 வரை பணியாற்றியதையே, தம் வாழ்வில் கிட்டிய பெரும்பேறாகக் கூறியுள்ளார்.




**இயற்றிய நூல்கள்**

# தமிழோசை
# முன்பனிக்காலம்
# இளங்கோவின் இன்கவி
# தமிழ் காட்டும் உலகு
# செங்கோல் வேந்தர்
# தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்
# கட்டுரைக்கொத்து
# An Introduction To Tamil Poetry’ -தமிழ்க் காப்பியங்களின் சிறப்பினை நிலைநாட்டிய நூலை, சிலப்பதிகாரத்தினையும் அடிப்படையாகக் கொண்டு எழுதினார்.
# சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ.இலட்சுமணசாமி முதலியாரின் வேண்டுகோளுக்கிணங்க, "ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியம்" எனும் அரிய நூலுக்குத் தலைமைப் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்றுத் திறம்பட, 1959 ஆம் ஆண்டு முதல் 1965 வரைப் பணியாற்றினார்.
# Advance Study of Tamil Prosody
# CILAPPADIKARAM THE EARLIEST TAMIL EPIC
# உழைப்பால் உயர்ந்த ஒருவர்
# தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்
# பெரியார் மன்றோ
# மன்னுயிர்க்கு அன்பர்

# அ. சிதம்பரநாதச் செட்டியார்

## (கட்டுரை)

### விருதுகள்

# குடந்தை அரசுக் கல்லூரியில், இளங்கலைத் தேர்வில் மாநிலத்திலேயே முதல் மாணவராக தேர்ச்சி பெற்று 'டாக்டர் ஜி. யு. போப் நினைவு' தங்கப் பதக்கத்தை பெற்றார் (1928).

# தருமபுரம் ஆதீனம் 'செந்தமிழ்க் காவலர்' எனும் சிறப்புப் பட்டம் வழங்கியது.

# மதுரைத் தமிழ்ச்சங்கம் சார்பில் பி.டி. ராஜன் இவரைப் பாராட்டி செந்தமிழ்க் காவலர் என்னும் பட்டம் அளித்தார். (1955)

### மறைவு

செட்டியார் மதுரை தியாகராசர் கல்லூரியில் முதல்வராக இருந்தபோது வாதநோயால் அவதிப்பட்டார். பின் மலேரியா நோய் வந்தது. 1960-67 ஆண்டுகளில் உடல்நலம் தேறி வந்தபோது ஜனவரி 22, 1967-ல் மதுரை திருநகர் தளக்கர்குளம் என்ற இடத்தில் ஒரு பாழுங்கிணற்றில் பிணமாய் மிதந்துகிடந்தார். கொலையா, தற்கொலையா என்று சந்தேகப்பட்ட செய்தியும் பத்திரிகைகளில் வந்தன.

### நாட்டுடைமை

அ.சிதம்பரநாதன் செட்டியாரின் படைப்புகள் தமிழக அரசால் 2009-ல் நாட்டுடைமை ஆக்கப்பட்டன.



அகர முதல நாளை நமதே
அகர முதல உரக்க சொல்வோம்
நிறைய பேர் அறிவுரை பெறுகிறார்கள்.
ஆனால் அறிவுள்ளவர்கள் தான்
அதனால் பயன் பெறுகிறார்கள்.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:
9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com